# அருள்ஜோதி

சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/– ஆண்டு சந்தா ரூ.110/–

அருள்: 27 சோபகிருது ஆண்டு/ ஆவணி–புரட்டாசி / செப்டம்பர் –2023 ஜோதி: 9

மாத பூசத்திருநாள்: 11.9.2023 அடுத்த மாதம் பூசம்: 08.10.2023



தெய்வத்திரு.

**சதீஷ்ராஜ் அடிகளார்,**

நிறுவனர்

தயவுத்திருமதி.

**தனலட்சுமி அம்மையார்,**

ஆசிரியர், வெளியிடுபவர்

மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:

**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**

புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,

முதன்மைச்சாலை, சென்னை– 600011.

தொடர்புக்கு: 044–25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 4 |
| வள்ளலாரின் புத்தகங்கள் | 6 |
| வடலூர் அருட்பயணம் | 7 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 8 |
| ஆத்மதரிசனம் | 10 |
| சாப்பிடும் பொழுது கவனம் உணவில் இருக்க வேண்டும் | 14 |
| திருமண தகவல் | 20 |
| திருக்காப்பிட்டுத் கொள்ளுதல் | 22 |
| வள்ளலார் வரலாறு | 24 |
| இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் தோற்றுவாய் | 26 |
| மாயையை புரிந்து கொள்ள வள்ளலார் சொன்ன குட்டிக்கதை | 28 |
| ஒழிவில் ஒடுக்கம் | 32 |

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

# பூதாதிகளைப் பொருத்தும் நிலைகளை அடைந்தவர்

உலகில் உள்ள உயிரினங்களின் உடல்கள், மற்றை உலகத்துப் பொருட்கள், மரம், செடி, கொடி முதலிய அனைத்தும் ஐந்து பூதங்களின் கூட்டுற வாலேயே அமைக்கப் பெற்றுள்ளன. அந்தப் பூதங்கள் ஐந்தும் வேறு வேறு விகிதாச்சாரங்களில் ஒன்று சேரும் பொழுது ஒரு பொருள், அல்லது உடல் தோன்றுகின்றது.

இவ்வாறுள்ள பூதக் கலப்பில் ஒரு மனித உடலுள் இவ்வைம் பூதங்களின் எல்லா விகிதாச்சாரத்தை நம் நாட்டில் எல்லா ஞானிகளும் கூறியுள்ளனர். அது யாதெனில் மண் ஐந்து பங்கு, நீர் நான்கு பங்கு, தீ மூன்று பங்கு, காற்று இரண்டு பங்கு, வான் ஒரு பங்கு இந்த விகிதத்தில் பூதங்கள் ஐந்தும் ஒரு புள்ளியில் சந்திக்கும் பொழுது, அங்கே ஒரு மனித உடல் தோன்றுகிறதாகும்.

இவ்வாறு உலகில் உள்ள உயிரினங்களின் உடல்கள், மற்ற மற்ற பொருட்கள், இயற்கைத் தாவரங்கள் மரம், செடி, கொடி வகைகள் என எத்தனையோ கோடான கோடி வகைகள் உள்ளன.

இப்படி ஐம்பூதக் கூட்டுறவின் விகிதாச்சார விகற்பங்கள் (சேர்க்கை முறைகள்) 12.8 லட்சம் கோடியாக விரிகின்றன என்று வள்ளலாரே தமது உரைநடைப் பகுதியில் கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட 12.8 லட்சங்கோடியாக விரியும் பூத விகிதாச்சார விகற்பங்கள் அனைத்தையும் தான் அறிந்துள்ளதாக வள்ளலார் கூறுகிறார். இவ்வளவு விகற்ப விகிதாச்சாரங்களைப் பிரமன் கூட அறிந்திரான். அவனுக்கு பூதங்கள் சேர்ந்த பின் உண்டாகும் வடிவத்தை எழுப்புவதே அவனது வேலை.

இத்தனை லட்சங் கோடி விகற்ப வகைகளை யார் அறிவார்? ஆண்டவர் ஒருவரே அறிவார். ஆண்டவராக ஆகிய வள்ளலாரே அறிவார். மற்றை யார் அறிவாரோ? அறிதரம் தாம் உளரோ? பாடலைப் பார்ப்போம்.

**பூதாதிகளைப் பொருத்தும் பகுதிப்**
**பொருத்தம் முற்றுமே**
**பொய்மை நீக்கிக் காணக்காட்டி**
**தெரித்தாய் மற்றுமே–4995**

## பிரணவ ஆகாரப் பரிசு பெற்றது

பிரணவம் என்பது ஓங்காரமே ஆகும். இந்த ஓங்கார நிலை என்பது அகார உகார மகாரம் கூடியது. அகாரம் என்பது



எட்டு. உகாரம் என்பது இரண்டு. மகார மாம் ம் என்பது. மேற்கண்ட இரண்டும் இல்லாது இருத்தல் என்பது. இதனை விளக்கிக் கூறின் நமது சுழுமுனையாகிய எட்டங்குல (எட்டு உயிர்ப்பை இரண்டங் குல (இரண்டு உயிர்ப்பாகக் குறைத்து, முடிவில் அந்த இரண்டங்குல உயிர்ப் பும் இல்லாது, தான் தன்னுள் முற்றிலும் வெற்றாக இருத்தல் என்பதே ஓங்காரம். இதனைப் பிரணவம் என்று வடமொ ழியினர் கூறுவர். இதற்குத் தமிழில் மிக ஆழமான பொருள் உள்ளது.

பிரள் + நவம் = பிரணவம் ஆயிற்று. பிரள் என்பது புரளுதல் என்பதே வழக் காறு ஆயிற்று. நவம் எனில் புதுமை என்பது. இந்த அண்டங்கள், 2427 உலகங்கள், கோள்கள் அத்தனையும் உருண்டை வடிவமாக இருந்து கொண்டு எப்பவும் அது உருண்டு கொண்டே இருக் கிறது அல்லவா? அவை களைச் சுழலச் செய்யும் ஆற்றல் எது? ஆக இத்தனை கோடா கோடி அண் டங்கள், உலகங்கள், கோள்கள் அனைத்தையும் சுழல வைக்கும் ஆற்றல் ஒன்று வேண்டும் அல்லவா? மேலும் அவைகளை எல்லாம் புரளுமாறு, சுழலுமாறு இயற்கை வைத்திருப்பதற்கு ரிய காரணமும் வேண்டுமல்லவா?

இவைகளுக்கு விடை கிடைப்பது பிரணவத்தின் ஆற்றல் அல்லவா! அவைகளை ஒரு தனி மனிதன் இயங்கச் செய்வதும், அந்த இயக்கத்தால் அந்த அந்த இடங்களில் வாழும் உயிர்களுக் குரிய பயனையும் செய்வது அவனது ஆற்றல் ஆகும்.

இவ்வாறுள்ள பிரணவத்தைத் தான் தன்னுள் கொண்டு வரப் பெற்று, அந்த ஆற்றலின் வடிவமாகவே, அதன் அடை யாளமாகவே அந்த ஆற்றலை உடைய உடலாகவே பெருமானை ஆண்டவர் ஆக்கிய பரிசைப் பெற்றார் திருவருட் பிர காசர்.

இத்தனை பெரிய ஆற்றலை இயற்கை உண்மைப் பெரும் பதியாம் அருட்சோதி ஆண்டவரை விட யாரால் பெற முடியும்? இத்தனை பெரிய ஆற்றலை பெருமானார் அவர்களுக்குப் பரிசாக அளித்தாராம் ஆண்டவர்! இத்தனை பெரிய பரிசைப் பெற யார் இதுவரை தகுதி பெற்றவர்? பெற்றுள் ளார்கள்? பாடலைப் பார்ப் போம்.

**வேதாந்த நிலையுமதன் அந்தத்தே விளங்கும்**
**மெய்நிலையும் காட்டுவித்தீர் விளங்கிய சித்தாந்த**
**போதாந்த நிலையுமப்பால் புகலரிதாம் பெரிய**
**பொருள் நிலையும் தெரிவித்தீர் புண்ணியரே நுமது**
**பாதாந்தம் அறிவித்தீர் சுத்த வடிவுடனே**
**பகர் பிரண வாகாரப் பரிசுமெனக் களித்தீர்**
**நாதாந்தத் தனிச் செங்கோல் நான் செலுத்தக் கொடுத்தீர்**
**நடராஜ ரேநுமக்கு நானெது செய் வேனோ 4749**

பிரள் + நவம் + ஆகாரம் பிரணவாகா ரம். ஆகாரம் எனில் உணவல்ல வடிவு,

அடையாளம், உடல், கொண்டு வருதல் எனப் பொருள்.

# வள்ளலாரின் புத்தகங்கள்

| | |
|---|---|
| 1.HOW SOUL BECOME LIGHT | - ரூ.120 |
| 2.சத்திய ஞானசபை தத்துவ விளக்கம் | - ரூ.80 |
| 3. THE JOURNAY | - ரூ.50 |
| 4.திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | - ரூ.20 |
| 5. வள்ளலார் வரலாறு (வினா–விடை) | - ரூ.30 |
| 6. திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | - ரூ.10 |
| 7. திவ்ய ஒளி | - ரூ.50 |
| 8. அருட்குறள் | - ரூ.50 |
| 9. ஐந்தாம் திருமுறை | - ரூ.200 |
| 10. ஆறாம் திருமுறை | - ரூ.150 |
| 11. சாகாநிலை சத்திய வாழ்வு | - ரூ.50 |
| 12. சுத்த சன்மார்க்கம் வினா–விடை | - ரூ.30 |
| 13. நாளந்தாதி | - ரூ.40 |
| 14. அகவல் பாராயண திரட்டு (சிறியது) | - ரூ.15 |
| 15. அகவல் பாராயண திரட்டு (பெரியது) | - ரூ.30 |

# மூலிகை மருந்துகள்

| | |
|---|---|
| 1. கூட்டுசூரணம் (50கி) | - ரூ.60 |
| 2.கரிசாலை (50கி) | - ரூ.60 |
| 3.திரிபலா (50 கி) | - ரூ.60 |
| 4. முடவட்டான் கால்சூப் (50 கி) | - ரூ.100 |
| 5.மூச்சுடர் கரிசாலை தைலம் 200 (எம்.எல்.) | - ரூ.300 |
| 6. அகத்தியர் கருவப்பட்டை பற்பொடி (80 கி) | - ரூ.45 |
| 7.கரிசாலை கண் மருந்து | - ரூ.70 |
| 8.மூலிகை தைலம் | - ரூ.40 |



# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்றும் அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

<u>அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்</u>

**1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.**

இந்தப் புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாதப்பூச நாள்: 11-09-2023**

**குறிப்பு: அடுத்த பயணம்: 08-10-2023**

# அருட்பெருஞ்ஜோதி
## அகவல் உரை

**தெருள்நிலை இதுஎனத் தெருட்டிஎன் உளத்திருந்து**
**அருள்நிலை காட்டிய அருட்பெருஞ் ஜோதி 322**

தெளிந்த ஞானநிலை இதுவாகும் என விளக்கித் தெரிவித்து, என் உள்ளத்தில் எழுந்தருளி, திருவருள் ஞானநிலையைக் காட்டி அழியா வாழ்வருள்வது அருட் பெருஞ்ஜோதி

**பொருட்பதம் எல்லாம் புரிந்துமேல் ஓங்கிய**
**அருட்பதம் அளித்த அருட்பெருஞ் ஜோதி 324**

மெய்ப்பொருளின் அருள் ஒளி நிலை விளங்கும் புறத்தேக வடிவங்கள் யாவற்றையும் கொடுத்து, அவற்றின் உள்ளிருந்து ஓங்கும் மேலான அருள் ஞான இன்ப நிலையை அடையச் செய்தருள்வது அருட்பெருஞ்ஜோதி,

(வேறு)

பொருளாகிய பத நிலைகளையெல்லாம் (அனுபவநிலைகள்) நான் அடையும்படி புரிந்து, எல்லா நிலைகளுக்கும் மேலாக நிற்கின்ற அருள் விளங்கும் அதீத நிலையை எனக்கு அளித்தருள்வது அருட் பெருஞ்ஜோதி

**உருள்சகடு ஆகிய உளம்சலி யாவகை**
**அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ் ஜோதி 326**

உருண்டோடும் வண்டிச் சக்கரம் போன்று, பொறி புலன்கள் காட்டும் வழியில் சென்று அலைபாயும் மனம் வெறுப்படைந்து மெலியாமல், திருவருள் ஞான நெறியில் செல்லுமாறு நிறுத்தி அருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**வெருள்மன மாயை வினைஇருள் நீக்கிஉள்**
**அருள்விளக்கு ஏற்றிய அருட்பெருஞ் ஜோதி 328**

திகைக்க வைக்கும் மனதில், மாயை விளைவிக்கும் வினைஇருளைப் போக்கி, என் உள்ளத்தில் அருள் ஞான விளக்கொளியை ஏற்றி, உடலும் உள்ளமும் ஒளிக் காட்சி நிறையுணர்வில் விளங்க வாழ்விப்பது அருட்பெருஞ்ஜோதி

**சுருள்விரி வுடைமனச் சுழல்எலாம் அறுத்தே**
**அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ் ஜோதி 330**

சுருங்குவதும் விரிவடைவதும் உடைய அடங்காத மன அலைச்சல்களை நீக்கி, ஒரு தன்மையாக நிறுத்தி (விரிந்த எண்ணங்களும், சுழன்று கொண்டே இருக்கும் நினைவுகளும் அறுபடும்போது), தூய ஞான இன்ப அருள் ஒளியை மனத்தில் நிறைவிப்பது அருட்பெருஞ்ஜோதி.

**விருப்போடு இகல்உறு வெறுப்பும் தவிர்த்தே**
**அருட்பேறு அளித்த அருட்பெருஞ் ஜோதி 332**

விருப்புணர்வையும், மாறுபாடு தரும் வெறுப்புணர்வையும் போக்கி, இரண்டையும் வேண்டுதல் வேண்டாமை அற்று ஒன்றாகக் கருதும் அருள்ஞான

*உணர்வைக் கொடுத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**அருட்பேர் தரித்துஉலகு அனைத்தும் மலர்ந்திட**
**அருட்சீர் அளித்த அருட்பெருஞ் ஜோதி 334**

*பேரருளையே தனது பெயராகக் கொண்டு, சன்மார்க்க நெறியில் உலகம் யாவும் அருளின்பத்தில் மகிழ்ந்திட, திருவருள் ஞானத்தின் சிறப்பைத் தருவது அருட்பெருஞ்ஜோதி.*

**உலகெலாம் பரவஎன் உள்ளத்து இருந்தே**
**அலகிலா ஒளிசெய் அருட்பெருஞ் ஜோதி 336**

*என் உள்ளத்திலிருந்து அளவிலாது ஞானஒளி பரப்பும் அருள் ஒளியை எல்லா உலகுகளிலும் உள்ள ஆன்மாக்கள் யாவும், தத்தம் உள்ளங்களில் போற்றிப் பணிந்து பயனுறச் செய்வது அருட்பெருஞ்ஜோதி.*

## 2. ஐம்பூத இயல்

**விண்ணின்உள் விண்ணாய் விண்நடு விண்ணாய்**
**அண்ணி நிறைந்த அருட்பெருஞ் ஜோதி 338**

*வானமாகிய பூதத்தில் தங்கி உள்ள விண் அணுக்களில் உள் நிறைந்து ஆகாயமாகவும், அதைச் சூழ உள்ள இடைநிலையாய் (ஆற்றலாய் பிரிவற்று), நெருங்கி நிறைந்திருப்பதும் அருட்பெருஞ்ஜோதி*

**விண்உறு விண்ணாய் விண்நிலை விண்ணாய்**
**அண்ணி வயங்கும் அருட்பெருஞ் ஜோதி 340**

*ஆகாயத்தில் தங்கியுள்ள விண் அணுக்களின் புற நிலையாகவும், அது ஒன்றோடு ஒன்று கூடிப்பெருகி இடையுறு நிலை கொண்டு பொருந்தியும், நெருங்கியிருந்து விளாங்குவது அருட்பெருஞ்ஜோதி*



# ஆத்மதரிசனம்

## உண்மையுடன் சேர்க்கை

**உண்மை எப்பொழுதும் காயப் படுத்துவதில்லை. காயம், அதை ஏற்றுக் கொள்ளாததால்தான் உண்டாகிறது. ஆரம்பத்தில் உண்மை உன்னைக் கவர்ந் துவிடுவதால் அதைச் சார்ந்து வாழத் தொடங்குவாய். பிறகு, நீயும் உண்மை யும் வேறில்லை என்று அதோடு ஒன்றிப் போய்விடுவாய்.**


**சீடன்: எந்த அளவுக்கு நாம் உண்மையு டன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்?**

குரு: நீ உண்மை ஒன்றையே விரும்பி அதனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதையே திருமணம் செய்துகொண்டு, அதனுடன் வாழ வேண்டும். உண்மையை விரும்புவோர் ஆசீர்வதிக்கப்பட்டவர் கள். ஏனென்றால், இறுதியில் அவர்களே உண்மையாகிறார்கள். அதனால் மற்றவர் கள் அவர்களால் ஈர்க்கப்படுகிறார்கள். நீ உண்மையாக இருப்பதற்கு எல்லாவற்றை யும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மை தன்னுடைய முழு ஸ்வரூபத்தையும் உனக் குக் காண்பிக்கும்.

**சீடன்: மனம் அடங்கிவிட்டால் என்ன நேரும் ?**

**குரு:** மனம் அடங்கிவிட்டால் அது ஆத்மாவுடனோ அல்லது மனசாட்சியு டனோ ஒன்றிப்போய்விடும். அப்பொ ழுது எல்லாம் தெளிவு பெறும். அதனால் எல்லோரும் அவரவர் மனசாட்சியின் குரலைக் கேட்டு அதற்கேற்றாற்போல் நடக்க வேண்டும்.

**சீடன்: சில சமயங்களில் மக்கள் பொதுப் பணியில் ஈடுபட்டு, அதில் சிக்கிக் கொண்டு, தங்கள் முன்னேற்றத்தை மறந்துவிடுகிறார் களே.**



குரு: ஒருவன் ஆன்மிகப் பணியில் ஈடு பட்டு இருந்தாலும், அதில் அவன் சிக்கிக் கொண்டுவிட்டால் அவனால் ஆத்மாவை உணர முடியாது.

**சீடன்: அன்பு, அடக்கம், பொறுமை ஆகியவை ஆத்மாவின் இயற்கையான தன்மைகள் அல்லவா?**

குரு: குரு, தம் சீடனுக்கு ஆத்மாவின் இத்தகைய இயற்கையான தன்மைகளை. ஓயாமல் நினைவூட்டுகிறார். ஆனால், சீடன், அவன் தானே சேர்த்துக்கொண்டி ருக்கும் அறியாமையினால் இந்த உண்மை களை நினைவுபடுத்திக்கொள்ள உறுதியாக மறுக்கிறான். அதற்குப் பதில் தானாகவே தேடிக்கொண்ட விஷயங்களைப் பெரிதாக மதித்துக் கொண்டாடுகிறான். இதுதான் பிரச்சினை. அதனால் ஒரு குருவுக்கு மிகப்பெரிய கஷ்டம் என்னவென்றால், அவர் சீடனின் மனத்தை அதன் இயற்கை யான தன்மைக்கு இழுத்துச் செல்ல எவ் வளவு முயன்றாலும், அது அவன் சேர்த் துக்கொண்ட தேவையற்ற இயற்கைக்கு மாறான விஷயங்களுக்குச் செல்லும்.

அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங்கருணை

# அன்பு கருணை தயவு

## அருட்பெருஞ்ஜோதி அன்பு வணக்கம்,



வள்ளலார் வழிகண்ட ‘அருள்ஜோதி தொலைக்காட்சி’ இத்தொலைக் காட்சியின் நோக்கம் உலகளாவியது. மனித வாழ்வில் மிக முக்கியமான அன்பு, ஒழுக்கம், ஜீவகாருண்யம் மிகமிக எளிமையான விளக்கங்கடன் படிப்பறிவு இல்லாத பாரம மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் ஒளிபரப்பாகின்றது. ஏதோ ஓர் நிகழ்ச்சி ஒருநாளைக்கு குறைந்தது 30 நிமிடங்கள் பார்த்தாலும் போதும் மனஅமைதி மற்றும் ஆத்மதிருப்தியை உணர்கிறனே?. அனைத்து நிகழ்ச்சிகளும் வள்ளலாரின் அருளோடு அமைந்திருக்கின்றது என்பதை உணரமுடிகின்றது. நமது குழந்தைகளுக்கு ஒழுக்கம், அன்பு, கருணை மிக மிக அவசியமானது. இவ்விசயங்களை மிக அழகாகக் கற்றுத்தருகின்றனர் அல்லது தொகுத்து வழங்குகின்றனர்.

குடும்ப ஒற்றுமை மற்றும் மனித ஒருமைப்பாடு என்பது இத் தொலைக்காட்சியில் தெளிவாக விளக்கப்படுகின்றது.

அருள்ஜோதி தொலைக்காட்சியின் மூலம் அடுத்த தலைமுறை வள்ளல்பெருமானாரின் அருளோடும், தயவோடும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை வளர்க்கும் என்பதில் ஐயம் இல்லை.

அருள்ஜோதி தொலைக்காட்சி மதங்களை மற்றும் மனங்களை ஒன்றிணைக்கும் ஓர் மாசற்ற தனித்துவம் வாய்ந்த மகத்தான சங்கமம்.

வாழ்க வளமுடன்
வளர்க தமிழுடன்



இங்கணம்
அடியேன் கே.கவிதா
நெகமம்.


# இல்லற வாழ்வையே யோக வாழ்வாக மாற்றலாம்

இன்றைய சூழ்நிலையில் மிக அவசிய மான தகவல் இது. காம இச்சையானது 5,6 வயதிலேயே ஏற்பட்டு விடுகிறது. ஆனால் அது பற்றிய போதுமான புரிதலானது பலருக்கும் முதுமையை அடைந்த பிறகும் இருப்பதில்லை. ஆண்பால் பெண்பால் தம்மை பற்றி படிப்படியாக கற்க நேராமல் இளமைப் பருவம் அடைந்த பிறகு திடீ ரென்று ஒரு நாள் ஏதோ ஒரு சந்தர்ப்பத் தினால் பால் உணர்வை அடைகின்றார் கள். அது பற்றிய புரிதல் இல்லாததால் அவர்களின் மனத்தில் தவறான எண் ணங்கள் உண்டாகி அந்த எண்ணத்தின் வேகத்தினால் உந்தப்பட்டு வேகமான சில செயல்களை செய்துவிடுகின்றன.

எனவே வயதிற்கு ஏற்ப, பாலியல் உணர்வு பற்றிய புரிதல் இருக்க வேண்டி யது அவசியமாகும்.

நமது தேகத்தை விரைந்து அளிக்கக் கூடியது 4. உணவு, உறக்கம், பாலியல் உணர்வு, பயம் இந்த நான்கிலும் முக்கி யமானது உணவும், பாலியல் உணர்வும். ஏனென்றால் இந்த தேகத்திற்கு உண வினால் 9 பங்கு நஷ்டமும், பாலியல் உணர்வால் 1 பங்கு நஷ்டமும் உண்டா கும். ஆனாலும் பாலியல் உணர்வே இந்த தேகத்தை மிக விரைவாக அழிக்கக்கூடி யது. ஆதலால் இந்த விஷயத்தில் அதிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என் கிறார் வள்ளல் பெருமான். இல்லறம் நல்லறமாக அமைய வேண்டுமானால் பாலியல் உணர்வு பற்றிய புரிதல் இருக்க வேண்டும்.

★ சோற்றாசையோடு காம சேற்றாசை



படுவாரை துணிந்து கொள்ள, கூற்றாசைப் படும் என்பார் வள்ளல் பெருமான்.

இந்த உடல் ஒரு அகல் தீபம் போன்றது. அதில் அகலானது தேகம். எண்ணை யானது இரத்தம். திரியானது சுக்கி லம். தீபத்தின் பிரகாசமானது ஆன்மா. ஆதலால் நம்முடைய தேகத்தின் சுக்கில மாகிய திரியைத் தூண்டி பெண்களிடத் தாலாயினும், வேறு தந்திரத்திலாயினும் செலவு செய்து விட்டால் சுக்கிலமாகிய திரி குறைந்து ஆயுளாகிய பிரகாசம் நஷ்டமாகி விடும் என்கிறார் வள்ளல் பெருமான். திருமணம் ஆகும் வரை விந்து சக்தியை காப்பவர்களின் வாழ்க்கை சிறப் பாக அமையும். அது அவர்களை சார்ந்த அனைவருக்கும் நன்மை பயக்கும்.

அப்படி ஒழுக்கமாக வாழ்பவன் திரும ணம் செய்தால், நல்ல ஆரோக்கியமான நல்ல ஒழுக்கமும் உடைய குழந்தையைப் பெற்றெடுப்பார்கள். தீபத்தின் திரியானது சித்தம் கட்டுவதால் அந்த சித்தத்தை மட்டும் நீக்குவது போல், சுக்கிலமானது காம இச்சையினால் ஆபாசப்பட்டுவி

டும். எனவே திருமணமானவர்கள் 15 நாட்களுக்கு ஒரு தரம் தேக சம்பந்தம் செய்து ஆபாசப்பட்ட சித்தம் ஆகிய சுக்கிலத்தை வெளிப்படுத்திவிட வேண்டும். திருமணம் ஆகாதவர்கள், காம இச்சை உண்டாகாத வாறு நல்ல ஒழுக்கத்தில் வாழ வேண்டும். காமக்குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில், ஞான அறிவினால் தடுத்துக் கொள்ள வேண்டும் என்பார் வள்ளல் பெருமான்.

கடவுளிடத்தில் இலட்சியமும், உயிர்களிடத்தில் தயவும் உடையவனுக்கு சித்தம் போன்ற சுக்கில ஆபாசம் நேரிடாது என்கிறார் வள்ளல் பெருமான்.

இல்லற இன்பத்திற்கு வள்ளலார் சொன்ன ஆறு தகவல்கள்:–

1. திருமண மாணவர்கள் இரவில் தேகசம்மந்தம் 15 தினத்திற்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும். அதுவே உத்தமம் (அ) 8–தினத்திற்கு ஒரு முறை செய்து கொள்ளலாம். அது நடுத்தரம். அதற்கு கீழ் குறைந்தால் உடல்நலம் கெடும். 4 தினத்திற்கு ஒருமுறை செய்தால், சுக்கிலம் நெகிழ்ச்சிப்பட்டு சந்ததி விருக்தியை கெடுக்கும் என்கிறார் வள்ளல் பெருமான். அதாவது குழந்தை பாக்கியம் இல்லாமல் போகும்.
2. தேகசம்பந்தம் செய்ய வேண்டிய ஒரு 25 நிமிடங்கள் மனத்தை பாலியல் உணர்வில் வைக்காமல் வேறொன்றில் செலுத்த வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான். தியானம் தோத்திரம் போன்றவை செய்தல் சிறப்பு.
3. பிறகு தேகசம்பந்தம் செய்யும்பொழுது அவசரம் இல்லாமல் நல்ல நினைப்போடு தன் வசத்தில் இருந்து மூச்சை அதிர்ந்து மேலிடாது அறிவும் மனமும் வேறுபடாமல் தேகத்திலும், மனத்திலும் சூடு தோன்றாமல் இடது புறம் சாய்வாக மெல்லென போகம் செய்ய வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான். போகத்தின் போது மந்திரம் உச்சரிப்பது, சுவாசத்தைக் கவனிப்பது சிறப்பு. எனவே மூச்சு அதிராது அறிவும், மனமும் வேறுபடாது. தேகத்திலும் மனத்திலும் சூடு தோன்றாது. உயிர்ச்சத்து வெளியேறாது.
4. போகத்தின் போது சுக்கிரம் வெளிப்பட்டு விட்டால் மீண்டும் போகம் செய்யக்கூடாது. எழுந்து குளித்துவிட்டு தியானம் செய்த பின்பு படுக்க வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான்.
5. பகலில் தேகசம்பந்தம் கூடாது. காலைப் புணர்ச்சி, பகல் புணர்ச்சி, அந்திப்புணர்ச்சி, இரவு முன்பங்கு புணர்ச்சி ஆகியவை இல்லாதிருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான்.
6. குழந்தை பேறு வேண்டிய காலத்தில் மட்டுமே சுக்கிலத்தை வெளிப்படுத்த வேண்டும். மற்ற காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமல் இருக்க தக்க உபாயத்தோடு போகம் செய்தல் வேண்டும். அவ்வுபாயமானது, பிராணவாயுவை உள்ளேயும் அடக்காமல், வெளியேயும் விடாமல் நடுவே உபாவச் செய்து கொள்ளுதலாம் என்கிறார். வாசியோகம் பழகுபவர்களுக்கும், நல்ல ஒழுக்கத்தையும், கருணையையும், பழகுபவர்களுக்குமே இது சாத்தியமாகும். எல்லா யோகப்பலன்களையும் எளிதில் கொடுத்து விடும்.

திருமணமான பிறகு கணவனானவன் ஏகபத்தினி விரதனாக இருந்து, மனத்தாலும் பிற பெண்களை தவறாக எண்ணாதவனாகக் கருணையோடு வள்ளல் பெருமான் சொன்ன ஒழுக்கங்களைப் பழக வேண்டும். மனைவியானவர் சிறந்த பதிவிரதையாக இருந்து கருணை உள்ளத்தோடு வள்ளல் பெருமான் சொன்ன ஒழுக்கங்களைப் பழக வேண்டும். அப்படி பழகி அவர்கள் நடத்தும் இல்லறம் நல்லறமாகும். அவர்கள் செய்யும் போகம் யோகமாகும்.

# சாப்பிடும்பொழுது கவனம் உணவில் இருக்கவேண்டும்

சாப்பிடும்பொழுது கவனத்தை உணவில் வைக்க வேண்டும். நாம் சாப்பிடும்பொழுது சாப்பிடுகிறோம் என்ற எண்ணத்துடன் உணவில் கவனம் வைத்துச் சாப்பிட்டால், அது நன்றாக ஜீரணம் செய்யும். சாப்பிடும்பொழுது கவனத்தைக் குடும்பம், வியாபாரம் போன்று வேறு ஏதாவது விஷயங்களில் வைத்துச் சாப்பிடும்பொழுது சரியாக ஜீரணம் வயிற்றில்தானே நடக்கிறது. அது எப்படி பாதிக்கும் என்ற சந்தேகம் வரும். நமது மூளைக்கும், உடலில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் சுரப்பிகளுக்கும், வேகஸ் என்ற நரம்பு மூலமாக இணைப்பு உள்ளது. நாம் எதைப் பற்றி எண்ணுகிறோமோ அது சம்பந்தப்பட்ட சுரப்பிகளை இந்த வேகஸ் நரம்பு சுரக்க வைக்கும்.



உதாரணமாக நாம் சிறுநீர் கழிக்க வேண்டும் என்றால் என்ன செய்கிறோம்? உடம்பில் எந்த பட்டனை (சுவிட்சை) அழுத்தினால் சிறுநீர் வருகிறது? அதற்கென தனியாக ஒரு பட்டனும் கிடையாது. மனத்தால் சிறுநீர் வரவேண்டும் என்று எண்ணியவுடன் வருகிறதல்லவா. எனவே மனம் நினைத்தால் மூத்திரப் பையில் கதவுகளைத் திறக்கமுடியும். அதேபோல் மனத்தால் நினைத்தால் கதவை அடைக்கமுடியும். இது மூலமாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு இரகசியம் என்னவென்றால், மனத்தால் நினைத்தால் நமது உடல் உறுப்புகளை இயக்க முடியும்.

நோய்கள் முதலில் மனத்தில்தான் தோன்றுகிறது. பின்னர் மனம் தான் உறுப்புகளுக்கு நோயை உண்டு பண்ணுகிறது. அதேபோல் நாம் ஆரோக்கியமாக இருக்கிறோம் என்ற எண்ணம் இருந்தால் மட்டுமே உறுப்புகளுக்கு நோய் குணமாகும்.

உதாரணம் நாம் தூங்கும்பொழுது கனவு காண்கிறோம். கனவில் ஒரு பாம்பு துரத்துவது போல காண்கிறோம். கனவில் வேகமாக ஓடுகிறோம். திடீரென கனவு கலைந்து எழுந்து அமர்ந்து பார்க்கும்பொழுது நமது இருதயம் வேகமாகத் துடித்துக் கொண்டுஇருக்கும். படபடவென இருக்கும் உடல் முழுவதும் வியர்வை வந்திருக்கும். நாம் கனவில்தானே ஓடினோம். பின்னர் ஏன் வியர்வை வந்தது? நெஞ்சு படபடக்கிறது? ஏனென்றால் கனவில் ஓடுவதுபோல்

மனம் நினைத்துப் பார்க்கும்பொழுது உடலில் ஓடுவதற்கான சக்தியை இழுக்கிறோம். அதற்கான சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. இந்த 2 உதாரணங்கள் மூலமாக நாம் புரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், மனம் எதைப் பற்றி நினைக்கிறதோ உடலிலுள்ள அது சம்பந்தப்பட்ட சுரப்பிகள் சுரக்கும்.

எனவே, உணவை உண்ணும்பொழுது, நமது கவனம், எண்ணம், நான் சாப்பிடுகிறேன் என்று இருந்தால் மட்டுமே, ஜீரணம் சம்பந்தப்பட்ட அனைத்துச் சுரப்பிகளும் நன்றாக சுரக்கும். அவ்வாறு இல்லாமல் சாப்பிடும்பொழுது குடும்பம், வியாபாரம், குழந்தை, மனைவி என்று யோசிப்பபவர்களுக்கு ஜீரண சுரப்பிகள் சுரக்காததால் தான் நமக்கு நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, தயவுசெய்து இனி சாப்பிடும்பொழுது கவனத்தை உணவில் வையுங்கள்.

உணவைப் பற்களால் நன்றாக கூழ்போல் அரைத்து உண்ண வேண்டும்.

நாம் சாப்பிடும்பொழுது உணவைப் பற்களால் நன்கு அரைத்துச் சாப்பிடவேண்டும். உணவைப் பற்களால் அரைக்காமல், நொறுக்காமல் யார்யாரெல்லாம் குண்டு குண்டாக அப்படியே விழுங்குகிறார்களோ, அவர்களுடைய வயிறு அவர்களை ஒரு கேள்வி கேட்கும். "அரைப்பதற்கு என்னிடம் பல்லா இருக்கிறது?" அல்லது வயிற்றில் என்ன மிக்சி போல் பிளேடுகள் உள்ளதா? அல்லது கிரைண்டர் போல் கல் இருக்கிறதா? என்று வயிறு நம்மைப் பார்த்துக் கேட்கும். வயிற்றில் பற்களும் இல்லை, பிளேடுகளும் இல்லை. கல்லும் இல்லை. பிறகு நாம் சாப்பிடும் உணவை வயிறு எப்படி ஜீரணம் செய்கிறது என்றால், வயிறு என்பது ஒரு குடம் போல. வயிற்றில் Hydrocloric Acid (HCL) என்ற அமிலம் சுரக்கும். இந்த அமிலம் தான் உணவை ஜீரணம் செய்கிறது. இந்த அமிலத்தின் சக்தி என்னவென்றால், நம் வயிற்றில் பசிக்கும்பொழுது சுரக்கும் பிசிலி அமிலத்தை எடுத்து ஒரு இரும்பின் மேல் ஊற்றினால் இரும்பே உருகும்!

நமது உள்ளங்கையில் ஊற்றினால் உள்ளங்கையில் ஓட்டை விழுந்துவிடும். இப்படி இரும்பையே உருக்கும் சக்தி வாய்ந்த அமிலம்தான் ஒவ்வொரு முறை பசிக்கும்பொழுதும் நமது இரப்பையில் உற்பத்தியாகிறது. எனவே சாப்பிடும் பொழுது பற்களால் நன்குமென்று பின்பு விழுங்க வேண்டும்.

## மரணமிலாப் பெருவாழ்வு தரும் உணவு

நாம் நம் வயிற்றுக்குச் சோறிட்டால் அது நம் உடலுக்கு ஊதியம். நாம் பிற வயிற்றுக்குச் சோறிட்டால் அதுவே நமது உயிருக்கு ஊதியம். கருணை உணர்வால் அந்த ஊதியத்தை அதிகம் பெற்றுக் கொண்டவர்களின் உயிர் உடலை விட்டு நீங்காது. அவர்களை எந்த ஆபத்தும் நெருங்காது. ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு என்பார் வள்ளுவப் பெருந்தகை. இல்லை என்று கேட்போர்க்கு கொடுப்பதும், நல்ல ஒழுக்கம் உடையவர் என்னும் பெயர் எடுப்பதும், தவிர இந்த உயிருக்கு நாம் கொடுக்க வேண்டிய ஊதியம் வேறு எதுவும் இல்லை. பிற உயிர்களின் துக்கத்தை எண்ணி உருக்கம் கொண்டு, அதன் துக்கத்தைப் போக்கினால் அதுவே வழிபாடு. உங்கள் உருக்கம் கண்டு இறைவன் இறக்கம் கொள்வான். அதுவே அருள். எல்லாம் வல்ல இறைவனின் அருளால் மட்டுமே மரணமில்லாப் பெருவாழ்வு பெற முடியும் என்கிறார் வள்ளல் பெருமான்.

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு.ஞானபிரகாசம் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திரு. ப.ஐயப்பன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



திருமதி. ஜெயமாலா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலயப் பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

**90030 34056**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை




எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை-600011

அருள்ஜோதி

தொலைபேசி: 9003034056, 9600024878

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com


## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கிகாரம் பெற்ற (பதிவெண் 24/239-2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மீக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு........................................... | ரூ.2000/- |
| மதிய உணவு ........................................... | ரூ.5000/- |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட)............................ | ரூ.8000/- |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

முகவரி:

பதிவெண்: __________









# சுதந்திர தின சிறப்பு நிகழ்ச்சிகள்

77 ஆம் ஆண்டு சுதந்திர தின விழா நிகழ்வானது அருள்ஜோதி குருகுல பாடசாலையில் நடைபெற்ற பொழுது தயவு திருமதி. கௌரிசுந்தரிஜெகதீசன் அவர்களால் தேசிய கொடி ஏற்றப்பட்டது. அந்நிகழ்வின் பொழுது 80க்கும் மேற்பட்ட குழந்தைகள் சுதந்திர தியாகிகளின் வேடம் அணிந்து அவர்களின் கருத்துக்களை வீரமான முறையில் முழங்கினார்கள்.









# திருமண தகவல்



| | | |
|---|---|---|
| பெயர் | : | சக்தி பாலன் |
| பிறந்த தேதி | : | 10.11.86 |
| பிறந்த நேரம் | : | 11:10 |
| பிறந்த இடம் | : | பாண்டிச்சேரி |
| உயரம் | : | 5:5 |
| படிப்பு | : | MBA (BE E.C) |
| மதம் | : | இந்து |
| இனம் | : | முதலியார் |
| கோத்திரம் | : | சிவகோத்திரம் (சைவம்) |
| பூர்வீகம் | : | மதுராந்தகம் |
| நட்சத்திரம் | : | சதயம் |
| ராசி | : | கும்பம் |
| லக்கனம் | : | |
| பிறந்த வரிசை | : | முதல் |
| தந்தை பெயர் | : | இரா அண்ணாதுரை (ஓய்வு) |
| தாயார் பெயர் | : | மலர் மகள் |
| | | உடன் பிறந்தோர்: A.காயத்ரி |
| முகவரி | : | ஊரப்பாக்கம் கிழக்கு |
| கைப்பேசி எண் | : | 9443728108 |
| சொந்த வீடு | | |
| வருமானம் | : | 50,000 மாதம் |
| | | மெடிக்கல் பயோமெட்ரிக் இன்ஜினியர் |

உ

ஸ்ரீ முருகன் துணை

**மணமகன் ஜாதக விபரம்**


| | |
|---|---|
| பெயர் | : அபிஷேக் மதிவாணன் |
| பிறந்த தேதி | : 03.06.1993 |
| தமிழ் தேதி | : ஸ்ரீமுக வருடம், வைகாசி மாதம், 21-ம் தேதி வியாழக்கிழமை, அதிகாலை 02.16 மணி |
| படிப்பு | : B.com., M.B.A., (MIT) |
| வேலை | : Managing Director, Own Business, Dealing in IT Hardware Equipments |
| ஆண்டு வருமானம் | : ரூ.12,00,000/- |
| இராசி | : துலாம் |
| நட்சத்திரம் | : விசாகம் |
| லக்கனம் | : மீனம் |
| இனம் | : இந்து, கள்ளர் |
| நிறம் | : மாநிறம் |
| தந்தை பெயர் | : திரு.R.மதிவாணன் (Business) |
| தாய் பெயர் | : திருமதி.M.ராஜகுமாரி |
| உடன் பிறந்தோர் | : M.ரோஷன் B.E., |
| முகவரி | : B-106,Sargam, Nanded City, Sinhagad Road, Pune – 411068. |
| பூர்வீகம் | : வடுவூர், திருவாரூர் - 614019. |
| சொத்து விவரம் | : சொந்த வீடு, நிலம் உள்ளது. |
| தொலைபேசி | : 9890760696, 9859859559 |

| | | | |
|---|---|---|---|
| ல | சுக் | கேது சூரி | புத |
| சனி | இராசி | | செ |
| | | | |
| | ராகு | சந் | குரு |

| | | | |
|---|---|---|---|
| | குரு சுக் | | சந் சூரி கேது |
| செவ் | அம்சம் | | |
| ல | | | |
| புத ராகு | சனி | | |

குரு மகா திசையிருப்பு : வருடம் - 12, மாதம் - 06, நாள் - 02

***சுபம்***



## திருக்காப்பிட்டுக் கொள்ளுதல்

8-9-1873 (ஸ்ரீமுக ஆவணி 25 திங்கள்) சித்தி விளாக விளம்பரம் (வதந்தி எச்சரிப்பு)

11-1873 (ஸ்ரீமுக கார்த்திகை) சித்தி வளாகத்தில் திருவிளக்கு வழிபாடு ஏற்படுத்தியது

வள்ளற்பெருமானார், ஸ்ரீமுக ஆண்டு தைத்திங்கள் 19ஆம் நாள் (30–1–1874) "நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப்போகின்றேன். பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது வெறும் வீடாகத்தான் இருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார்; என்னைக் காட்டிக்கொடார்," என்று கூறிவிட்டு அறைக்குள் சென்று அமர்ந்துகொண்டு கதவைத் திருக்காப்பிடும்படிக் கட்டளையிட்டார்.

ச.மு.க. சரித்திரம் ப : 63

என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனார்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேருடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே

– திருவருட்பா ஆறாம் திருமுறை

# தேன் இஞ்சி ஊறல்

நம்முடைய பாரம்பரிய முறையில் தேனில் இஞ்சியை ஊறவைத்து, அதை மருந்தாக, உணவாக எப்படி எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றி பார்ப்போம்.



நமது தமிழ் சித்தர் பெருமக்கள் சொல்லியது காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலை கடுக்காய். அதாவது காலையில் இஞ்சியை நாம் உணவாக (மருந்தாக) எடுத்துக் கொள்ளும் பொழுது நமது ஜீரண மண்டலம், வாய்வுத் தொல்லை, பித்தம் இது மூன்றுமே சரி செய்யப்படும். அதோடு நாம் தேனையும் சேர்த்து போகின்றோம். வள்ளல் பெருமான் தேன் என்பது ஒரு உத்தம ஆகாராம் என்று சொல்லி இருக்கின்றார். ஒரு ஜீவகிம்சம் இல்லாமல் சுத்தமான முறையில் எடுக்கப்பட்ட மலைத்தேன் (அ) பண்ணைத் தேன் இதில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி, தேன் இஞ்சி ஊறல் எப்படி செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்:-**

இஞ்சி, தேன். இஞ்சியை நன்றாக கழுவி, அதன் தோலை நீக்கிவிட்டு, சிறு சிறு, வட்டவட்டமான பில்லைகளாக வெட்டி, ஒரு சுத்தமான பருத்தி துணியை நன்றாக விரித்து இஞ்சியை துணியில் நிழலில் உலர்த்தவும். அப்பொழுது அந்த இஞ்சியில் இருக்கக்கூடிய நீர் தன்மையை பருத்தித் துணி உரிந்துவிடும்.

பிறகு ஒரு கண்ணாடி பாத்திரம் (அ) ஒரு மண்பானையில் எடுத்து வைத்து அதில் தேன் சேர்த்து நன்றாக ஊற விட வேண்டும். இதனை முறையாக 48 நாட்கள் (ஒரு மண்டலம்) நாம் ஊறவைத்து 48 நாட்கள் கழித்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடும்போது, ஜீரண பிரச்சனையை நீக்கி, பித்தத்தை நீக்கி, வாயுவை நீக்கக்கூடியது. இது சித்தர்கள் சொல்லிய ஒரு காயகற்ப மருந்து. இதை வீட்டிலேயே அனைவரும் செய்யலாம்.

இதற்கான பத்தியம்: எப்போது அசைவ உணவு ஆகாது, சுத்த சைவ உணவு எடுத்துக் கொண்டு முறையான உணவு கட்டுப்பாடு இருந்து கொண்டு, இந்த மருந்தை எடுத்துக் கொள்ளலாம்.

# வள்ளலார் வரலாறு

## (மாணவர்களுக்கான ஒருவரி வினா-விடை)

**124.கொடியின் அளவு என்ன ?**

*கால்பங்கு மஞ்சள், முக்கால் பங்கு வெண்மை.*

**125.சித்திவளாகத்தில் திருவிளக்கு வழிபாடு நடந்தது எப்போது ?**

*ஸ்ரீமுக ஆண்டு, கார்த்திகைத் திங்கள்.*

**126.வள்ளலார் பெற்ற தேக மாற்றங்கள் யாவை?**

*சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் ஆகிய மூன்று.*

**127.வள்ளலார் எப்போது மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றார் ?**

*30.01.1874*

**128. அப்போது உடன் இருந்த மாணவர்கள் யாவர் ?**

*தொழுவூர் வேலாயுதனார், கல்பட்டு ஐயா முதலியோர்.*

**129.வள்ளலார் என்ன சொல்லிவிட்டு அறைக்குள் சென்றார் ?**

*'இப்போது இந்த உடம்பில் இருக்கிறோம். இனி எல்லா உடம்புகளிலும் புகுந்துகொள்வோம், அஞ்சவேண்டாம்' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.*

**130.அந்த அறையை அரசு அதிகாரிகள் யாரும் பார்வையிட்டனரா?**

*தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், ஜே. எச். கார்ஸ்டின், ஜார்ஜ் பான்பரி முதலியோர் பார்வையிட்டனர்.*

**131. தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர் மேட்டுக்குப்பம் வந்து விசாரணை செய்தது எப்போது ?**

*நிலிஞி, 1874.*

**132. விசாரணை அறிக்கை என்ன ?**

*வள்ளலார் உடம்போடே மறைந்தார் என்பது.*

**133.இந்த அறிக்கை எதில் உள்ளது ?**

*1906ஆம் ஆண்டு வெளிவந்த தென்னார்க்காடு மாவட்ட அரசிதழில்.*

**134.வள்ளலார் நிறைவுக்குப் பின் சங்கம், சாலை, சபை முதலியவற்றை நிருவகித்தவர் யாவர்?**

*சங்கம்– தொழுவூர் வேலாயுதனார்*

*சாலை– கல்பட்டு ஐயா*

*சபை– சபாபதி சிவாச்சாரியார்*

*சித்திவளாகம்– ஞானாம்பாள்*

*நிலம்– வேட்டவலம் ஜமீன்தார்.*

**135.வள்ளலார் நமக்குச் சொன்ன மகாமந்திரம் எது ?**

*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி!*

*தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி!*

# நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு அன்ன தர்மத்திற்காக காணிக்கை வழங்கும் கருணை உள்ளங்களின் ஆனந்த அனுபவங்கள்

எனது பெயர் ஸ்ரீ பிரியா, நான் அண்ணாநகர் வி.ஓ.சி. காலனியில் வசித்து வருகிறேன். நாங்கள் கடந்த 10 வருடமாக அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு நன்கொடை அளித்து வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் எங்கள் இல்லத்திற்கே வந்து அன்ன ஆலய சேவாதாரிகள் நன்கொடையை பெற்றுக் செல்வார்கள்.

என்னுடைய பக்தியின் வெளிப்பாட்டாக பிற உயிர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று ஒரு வழக்கம் என் மனதில் எழுந்தது. அதை நன்றாக அருள்ஜோதி அன்ன ஆலயம் நிகழ்த்தி வருகிறது அத்தனையும் இறைவன் செயல்தானே அதற்கான அன்பை நான் செயல்கள் வழியாக காணிக்கையாக செலுத்துகிறேன்.

காணிக்கை கொடுத்த உடன், மனபாரம் இறங்கியது போன்ற உணர்வு. பாரத்தை தாங்கிக் கொள்ளும், (அ) பாரத்தை தாக்குப்பிடித்துக் கொள்ளும் மனவலிமை கிடைக்கிறது. மனம் இளகி அமைதி பெறுகிறது. மன இறுக்கம் குறைகிறது. சிந்தனை வலுப்பெறுகிறது. நல்லது நடக்க வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

# அருள் ஜோதி குருகுலப் பாடசாலையில் மாணவர்கள் கல்விப் பயில உதவும் கருணை உள்ளங்களின் அனுபவங்கள்

எங்களது பெயர் இந்திரா பிரகாஷ். நாங்கள் வள்ளலார் நகரில் வசித்து வருகிறோம். கடந்த 7 வருடமாக அருள்ஜோதி பாடசாலைக்கு எங்களால் இயன்ற உதவியினை அளித்து வருகின்றோம். நாங்கள் பிறந்ததில் ஒரு துளியாவது குழந்தைகள் நன்மைக்காக அமைவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். ஆகவே இப்புத்தகத்தை படிக்கும் அனைவரும் நம்மால் இயன்ற அளவு கல்வி கற்போற்கு வேண்டிய உதவிகளை செய்வோம்.

அது பணமாகவோ, பொருளாகவோ (அ) கல்வித் தானம் வழங்கும் அறக்கட்டளையோடு இணைந்து செய்யும் கல்வி தானம் அழகாய் பிறர் வாழ்வை ஒளி வீசவே செய்யும். கல்வி தானம் நம்மை மேம்படுத்தும், சமூகத்தை மேம்படுத்தும், நம் எதிர்ால சந்ததிகளை மேம்படுத்தும்.

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் தோற்றுவாய்

'பணிந்துபணிந்து அணிந்அணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தவனு பவமே
துரியமுடி அனுபவமே சுத்தசித் தாந்தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடிலப் பொழுதே
காணாத காட்சியெலாங் கண்டுகொள லாமே'

எவ்வுலகும் எவ்வுயிரும் எச்செயலுந் தோன்றி
இயங்குமிட மாகியெல்லா முயங்குமிடமாகித்
தெவ்வுலகும் நண்புலகுஞ் சமனாகக் கண்ட
சித்தர்கள்தம் சித்தத்தே தித்திக்கும் பதங்கள்
இவ்வுலகில் வருந்தநடந் தென்பொருட்டா லிரவில்
எழிற்கதவந் திறப்பித்தங் கென்கையிலொன் றளித்தாய்
அவ்வுலக முதலுலகம் அனைத்துமகிழ்ந் தேத்த அம்ப
லத்தே நடம்புரியும் செம்பவளக் குன்றே

இத் திருப்பாக்களின் உள்ளக்கிடக்கையை ஆராய்க.

"தான் அஃது என்னும் இரண்டற்ற நிலை மீது விளங்கும் அநுபவங்கள் எழுத்தில் அடங்குவனவல்ல. அவற்றை ஏழையேன் எங்ஙனம் எடுத்துரைக்க வல்லேன்?'

நாதாந்த வரையுமெங்கள் நாயகனார் செங்கோல்
நடக்கின்ற தென்கின்றார் நாதாந்த மட்டோ
போதாந்த நிலையுமுயர் யோகாந்த நிலையும்
புனிதகலாந் தப்பதியும் புகல்கின்றார் புகலும்
வேதாந்த வெளியுமிகு சித்தாந்த வெளியும்
விளங்கும்வற் றப்பாலும் அதன்மேலப் பாலும்
வாதாந்தத் தன்மேலும் அதன்மேலப் பாலும்
மன்றாடி அருட்செங்கோல் சென்றாட லறியே

என்றார் சுவாமிகளும்.

இவ் வாதங்களினும் படிப்படியாய், அவ்வவ் வந்த அநுபவமாய் விளங்குஞ் சிவம் ஒன்றே என்பதை,

'ஆறந்த நிலைகளின் அநுபவ நிறைவே
அதுவது வாயொளிர் பொதுவுறு நிதியே
கூறந்த நிலைகளு மொருநிலை யெனவே
கூறியென் உள்ளத்திற் குலவிய களிப்பே
பேறந்த நெறியெனக் காட்டியென் றனையே
பெருநெறிக் கேற்றிய ஒருபெரும் பொருளே
சாறெந்த நாள்களும் விளங்குமோர் வடல்வாய்த்
தனிநட ராசவென் சற்குரு மணியே

என்னும் பாட்டான் சுவாமிகள் விளக்கியுள்ளார்.

ஈண்டுக் குறிப்பிட்ட அந்தங்களின் வைப்புத், தொகுப்பு முறை யென்க. ஒவ்வோர் அந்தமுங் கோடி கோடி கூறுகளாகப் பிரிந்து பிரிந்து கிடத்தலைச் சுவாமிகள் பலவிடங் களில் அறிவுறுத்துகிறார்.

நல்லார்சொல் யோகாந்தப் பதிகள்பல கோடி
நாட்டியதோர் போதாந்தப் பதிகள்பல கோடி
வல்லார்சொல் கலாந்தநிலைப் பதிகள்பல கோடி
வழுத்துமொரு நாதாந்தப் பதிகள்பல கோடி
இல்லார்ந்த வேதாந்தப் பதிகள்பல கோடி
இலங்குகின்ற சித்தாந்தப் பதிகள்பல கோடி
எல்லாம்பே ரருட்சோதித் தனிச்செங்கோல் நடத்தும்
என்னரசே என்மாலை இனிதுபுனைந் தருளே

இவ் வாதங்களில் நிகழும் ஒவ்வோர்

அநுபவத்தையும் ஒவ்வொரு முகமாக ஞானிகள் கூறுவது வழக்கம். இக் கருத்துப் பற்றியே தமிழ்மக்கள் முழுமுதற் பொருட்கு ஆறு முகங் கூறினர் போலும்!

மனிதன் ஐந்தறிவால் பெரிய உண்மையை ஆராய்ந் தறிதல் இயலாது. ஆறாவது அறிவு விளங்கப்பெற்ற பின்னரே அவன் உண்மை உணரும் பேறு பெறுகிறான். இது குறித்து, 'முருகன் அல்லது அழகு என்னும் நூலிலும்

'கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழுங்
குருவே சண் முகங்கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர் தம் மதியி லூறும்
வானமுதே ஆனந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கு ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த
செல்வமே எல்லையிலாச் சீர்மைத் தேவே

இம் மகாதேவமாலைப் பாக்களை யோகக் கண்கொண்டு நோக்குமாறு அன்பர்களாகிய உங்களை வேண்டுகிறேன்; அவற்றைப் புராணக் கண்கொண்டு நோக்கி இடர்ப்படா திருக்குமாறு உங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். ஆறந்த அநுபவங்களைப் புராணங்கள் கதை வடிவாகக் கழறும். இவ் வாறந்தங்களைப்பற்றி யான் அறிந்தவாறு சுருக்கிச் சொற்றேன். அவற்றின் நுட்பங்களைப் பெரியோர்பால் கேட்டுத் தெளிவுறுதல் நலன்.

இந்த ஷடாந்தத்தில் விளங்குவது சமரச சன்மார்க்கம். யோகம் முதலியவற்றில் தலைப்படாது, ஆணவத்தில் அழுந் திக் கிடப்போர் சமரச சன்மார்க்க நிலையெய்தல் அரிதே. ஆணவமற்ற ஒரு நிலையை, ஷடாந்த சமரச சன்மார்க்கம் என்று சுவாமிகள் அறிவுறுத்திப் போந்தார். இனிச் சமரசம், சன்மார்க்கம், சங்கம் என்பனவற்றின் மீது கருத்துச் செலுத்துவோம்.

## உ. சமரசம்

சமரச சன்மார்க்க சங்கம் என்னும்



பொருளில் முதலா வது சமரசத்தை எடுத்துக்கொள்வோம். சகோதரிகளே! சகோதரர்களே ! சமரசத்தைப் பற்றி இதுகாறும் எழுந்த பேச்சுக்கள் எத்துணை! எழுத்துக்கள் எத்துணை ! அவைகட் கோர் அளவுமுண்டோ? சமரசத்தைப் பற்றி எழுந்த பேச்சுக்களும் எழுத்துக்களும் மலையெனவுங் கடலெனவும் நிற்கின்றன ; முழங்குகின்றன. உலகிடைத் தோன்றிய அறிஞர் அனைவருஞ் சமரசத்தையே அறிவுறுத்திச் சென் றனர். இப் பொல்லாத உலகம் சமரசத்துக்குச் செவி சாய்க் கிறதா? அதை நடையில் கொணர வேட்கையாதல் கொள் கிறதா? இல்லையே. சமரசம், வாழ்வில் நுழைந்து ஆட்சி புரியின், உலகில் போர் ஏது? பூசல் ஏது? புரட்சி ஏது? சமரசம் பரவின் அரசு ஏற்றுக்கு? சட்டம் எற்றுக்கு? நீதிமன்றம் எற்றுக்கு? இவை யாவும் உலகில் சமரசம் பரவாமையை யல்லவோ விளக்குகின்றன!

# மாயையை புரிந்து கொள்ள வள்ளலார் சொன்ன குட்டிக் கதை



★ இந்த பதிவில் இறைவனின் மீது உண்மையான அன்பு உண்டாக என்ன செய்ய வேண்டும்?

★எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை நம்மால் காண முடியாததற்கு காரணம் என்ன?

இதனை முழுமையாகப் படித்தால் இந்த வாழ்வை புரிந்து கொள்வது எளிதாகும்.

ஆதரவற்ற ஒரு சிறுவன் அடர்ந்த இருளில் மாட்டிக்கொள்கிறான். அதனால் எங்கும் நகர முடியாத அளவிற்கு இருள் சூழ்ந்திருந்தது. ஆதரவு ஏதும் இன்றி தவிக்கின்றான். அப்போது தூரத்தில் சிறு வெளிச்சம் தெரிகிறது. எனவே அந்த வெளிச்சத்தை நோக்கி ஓடுகின்றான். அங்கே கூட்டமாக நின்று மக்கள் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த சிறுவன் அந்த கூட்டத்திற்குள் நுழைந்து அங்கே என்ன இருக்கிறது என்று பார்க்கிறான். அங்கே ஒரு பாம்பு படம் எடுத்து ஆடுகிறது, அந்த பாம்புக்கு நடுவில் ஒரு பாம்பாட்டி நின்று கொண்டு அந்த பாம்பை ஆட்டி வைக்கின்றான். அங்கே நின்று கொண்டிருந்தவர்கள் எல்லாம் பாம்பாட்டியை, பாராட்டி கைத்தட்டி அவன் விரித்த போர்வையில் சில்லறையை போடுகிறார்கள். ஆனால் இந்த சிறுவனால் பாம்பின் ஆட்டத்தை ரசிக்க முடியவில்லை. பார்த்து பயப்படுகிறான். அவன் பாம்பின் ஆட்டத்தை மட்டும் கண்டு பயப்படவில்லை, அதனை ஆட்டி

வைக்கும் அந்தப் பாம்பாட்டி கண்டும் பயப்படுகிறான்.

அந்தப் பாம்பாட்டி ஒரு பெரிய மாயாவி போலத் தெரிந்தான். எனவே அந்த சிறுவன் அந்த இடத்தை விட்டு ஓடிவிட வேண்டும் என்று நினைக்கின்றான். ஆனால் அவனால் அசையவே முடியவில்லை. அந்த பாம்பாட்டி சிரித்துக் கொண்டே உன்னால் எங்கிருந்தும் நகரம் முடியாது நீ இங்கிருந்து நகர நினைத்தால் சிலையாவாய் என்றான். அப்பொழுது தூரத்தில் ஒரு சாது இருப்பதை காண்கிறான். அந்த சாதுவிடம் தன்னைக் காப்பாற்றும் படி கூவி அழைக்கின்றான். அந்த சாது சிறுவனை நெருங்க, நெருங்க முதலில் பாம்பு மறைந்தது. பிறகு அங்கு நின்று கொண்டு இருந்த கூட்டம் மறைந்தது.

அதன் பிறகு பாம்பாட்டியும் மறைந்தான். அந்த சிறுவனாய் இப்பொழுது அசைய முடிந்தது. அந்த சிறுவன் ஓடிச் சென்று சாதுவின் காலில் விழுந்து, என்னை விட்டு எங்கும் செல்லாதீர்கள் என்னை உங்களோடு அழைத்துச் செல்லுங்கள் என்றான். அந்த சாது சிறுவனைத் தூக்கி தன் மார்போடு அணைத்தர். அந்த சிறுவனும் மறைந்து போனான். தானும் அந்த சாதுவும் ஒன்றாய் இருப்பதாய் சிறுவன் உணர்ந்தான். தான் வேறு, அந்த சாது வேறு அல்ல என்று மகிழ்ந்தான்.

★ இந்தக் கதையில் அந்த ஆதரவற்ற சிறுவன் தான் ஆன்மா.

★ அந்த சிறுவன் மாட்டிக் கொண்ட இருள் ஆணவம். தூரத்தில் தெரிந்த சிறு வெளிச்சம் மாயையின் வெளிச்சம்.

★ அந்த பாம்பு தான் மனம்.

★ பாம்பாட்டித்தான் மாயை.

★ அங்கு நின்றிருந்த கூட்டம் தான் ஆன்மாக்கள்.

★ பாம்பாட்டியாகிய மாயை மயக்குகிறது. ஆன்மாக்கள் மயங்குகின்றன.

★ இந்த மயக்கத்தால் பிரபஞ்சம் போகம் உண்டாகிறது. இந்த பிரபஞ்ச போகமே ஆன்மாக்கள் மாயைக்கு கொடுக்கும் பரிசு.

அபக்குவ ஆன்மாக்கள் ஆகிய பலரும் பாம்பாட்டியாகிய மாயையின் மயக்கத்தில் நின்று மகிழ்ந்து பரிசுகளை வழங்கிக் கொண்டு இருக்க, பாம்பாகிய மனத்தையும், பாம்பாட்டியாகிய மாயையும் கண்டு பயந்த சிறுவன், தான் பக்குவ ஆன்மா. அங்கு நின்ற சாது தான் இறைவன். மாலையால் ஆன இந்த தேகம் துன்பம் ஆனது என்று உணர்ந்து அதிலிருந்து விடுபட நினைக்கும் பொழுது ஆண்டவர் நமது உணர்வில் தோன்றுகின்றான்.

அவரை விரும்பி அழைக்கும் பொழுது இந்த துன்பமான மாயை எல்லாம் விலகிச் செல்கின்றன. யான் எனது என்னும் ஜீவ போகத்தை விட்டு அவர் பாதத்தில் விழுவதே சரணாகதி. அந்த சரணாகதியால் அறிவே வடிவாகிய ஒளி தேகம் கிடைக்கும்.

சாதுவாகிய இறைவன் சிறுவனாகிய ஆன்மாவை மார்போடு அனைத்து அவரோடு இணைத்து கொள்வதே பேரின்ப பெருவாழ்வு. பாம்பும், பாம்பாட்டியும், அங்கே கூடி இருந்த கூட்டமும், அந்த சாதுவை சந்திக்க வழி வகுத்து பின்பு விலகியது போல் இந்த மனமும், மாயையும் பிரபஞ்சமும் நாம் இறைவனை அடைய வழிவகுத்து பின்பு மறைகின்றன.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை நம்மால் காண முடியாததற்கு காரணம் அசுத்த மாயா சக்தியான கருப்புத் திரை தான். இறைவன் மீது உண்மையான அன்பு உண்டாக வேண்டும் என்றால் இந்த திரை விலக வேண்டும். இந்த அசுத்த மாயா சக்தி மன ஆற்றலையும், தேக ஆற்றலையும் கெடுக்கின்றது. இதனை பிரக்ரிதி மாயை என்று சொல்வார்கள். இந்த மனமும், தேகமும் நாம் நல்லறிவு பெற்றுக்கொள்ள கொடுக்கப்பட்ட படிகளுள்

ஒன்றாக இருந்தாலும், நாம் ஆணவத்தி னால் இவற்றை தவறாகப் பயன்படுத்தும் போது, இந்த மன ஆற்றலும் தேக ஆற்ற லும் நமது அறிவை மறைக்கும் திரையா கிறது. இந்த தேக ஆற்றல் மற்றும் மன ஆற்றலே, தேக மயக்கம் மற்றும் மன மயக்கம் என்கின்றது. எனவே நாம் ஆன்மா என்கின்ற உணர்வே இல்லா மல் தேகத்திற்காகவும், மனத்திற்காகவும் மட்டுமே சிந்திப்போம் செயல்படுவோம். ஆன்மாவிற்காக சிந்திக்க மாட்டோம் ஆன்ம விளக்த்திற்காக செயல்படமாட் டோம்.மன மயக்கத்திலும் தே மயக்கத்தி லுமே வாழ்வோம்.

பெரியோர்கள் இந்த உடம்பை பொய் என்று கூறினாலும், மனமே நீ மெய் யென்று பொய் மயக்கம் கொள்கின்றாய் என்றார் வள்ளல் பெருமான். இந்த பொய் மயக்கங்கள் எல்லாம் நீங்கினால், பொய் உடலானது மெய் உடலாகவும் மாற்றமடையும்.

**இறந்திறந்தே இளைத்ததெல்லாம் போதும்**

**இந்த உடம்பே இயற்கை உடம்பாக அருள்**

**இன்னமுதம் அளித்தென புறம் தழுவி**

**அகம் புணர்ந்தே கலந்துகொண்டு எந்நாலும்**

**சிவபோகம் பொங்கி எழ விழைந்தேன்**

என்று பாடுவார் வள்ளல் பெருமான். உன் செய்த தேகம் ஒளி வடிவாக நின்று ஓங்குகின்றேன் என்பார். ஒளிவடிவாக மாற்றம் பெறாத வரை இந்த தேக மயக்கம் பொய்யானது தான். ஆனால் மெய்யாக காட்டுகிறது பொய் மயக்கங்கள். அந்த பொய் மயக்கங்களே இந்த திரைகள் எல்லாம். அதில் முதல் திரை தேக மயக் கம் மற்றும் மன மயக்கமாகிய கருப்புத் திரை. இந்த மாயாசக்தியை நீக்க நமது அறிவைப் பயன்படுத்த வேண்டும். இறை வனின் அருட்சக்தி நமக்குள் மனசாட்சி யாக இருந்து, நன்மை தீமைகளை எடுத் துக் கூறி நன்மை மட்டும் செய்ய சொல்லி அறிவுறுத்தும்.

ஆனால் ஆணவத்தினால் நம்மில் பலரும் அதைப் பொருட்படுத்துவதில்லை. எனவேதான் தேக மயக்கமும், மன மயக் கமும் நம்மை அழுத்த ஆரம்பிக்கின்றன.

குடிகாரன் குடிப்பது தவறு. குடியால் அழிந்து விடுகின்றோம் என்று தெரிந்தே குடித்து அழிவது போல் நாம் தெரிந்தே தீமை செய்து அழுகின்றோம். எனவே தீமை செய்யும் மனத்தை வளைத்து வில் லாக்கி மனதிற்கு துணையாக இருக்கும் பொய் புலன்களை திருத்தி கயிராக்கி, தடு மாறும் அறிவை நிலைநிறுத்தி, அம்பாக்கி எய்தால் இந்தத் திரை விலகும்.

அறிவை மறக்கும் இந்த திரையை அறிவாலையே நீக்க வேண்டும். அதற்கு அறிவை வளர்க்க வேண்டும்.

அறிவு என்பதும் தயவு என்பதும் ஒன்றுதான். எங்கு தயவு இல்லையோ அங்கு அறிவு இல்லை என்று பொருள். அந்த புரிதல் என்றும் மாறாமல் இருக்க வேண்டும்.

இந்த உடல் அற்பமானது என்று உணரும் போது தான், இந்த உடலை அற்பு தமாக மாற்றும் அறிவு உண்டாகும். அந்த உணர்வு உண்டாக வேண்டும் என்றால் நல்லொழுக்கத்தில் பழக வேண்டும். இந்த தேகமும், மனமும் நாம் நல்ல அறிவை பெற்றுக் கொள்ள இறைவன் கொடுக்கப் பட்ட கருவிகள் என்று உணர்ந்து நல்லொ ழுக்கத்தில் பழகும் போது இந்தத் திரை விலகுகிறது. அதனால்தான் வள்ளல் பெருமான் மரணமிலா பெருவாழ்வில் இந்திரிய ஒழுக்கமும் கரண ஒழுக்கமும் நமக்கு அருளி இருக்கின்றார்.

இந்த கருப்புத் திரயின் மறைப்பால்

என்ன நன்மை என்றால், இந்த மறைப்பு இல்லை என்றால் ஜீவன் பிறப்பிற்கு வராது. ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ மாட்டார்கள். குடும்ப பந்தம் இருக்காது. சமூகம் உருவாகாது. அப்படி உருவாக வில்லை என்றால் அறிவு வளர்ச்சி இருக் காது. எனவே இவையெல்லாம் உருவாகி, இவற்றில் எல்லாம் தேர்ச்சி பெற்ற பிறகு சிறிது அறிவு தெளிவு உண்டாகும்.

அப்போது இது மயக்கம் என்ற நிலை ஏற்பட்டு திரை விலக ஆரம்பிக்கும். அப்படி விலகினால் நமது உடலிலும், உள்ளத்திலும், உலகிலும் உள்ள ஆண்டவ ரின் அரசாட்சி நமக்கு விளங்கும். எனவே அருளின் மேல் உண்மையான ஆசை உண்டாகும். ஆண்டவரின் அருள் அரசு நம்மை எப்படி எல்லாம் வளர்க்கின்றது என்று உணர்ந்தாலே ஆண்டவரின் மீது உண்மையான அன்பு உண்டாகும்.

தேவ ஆற்றல் மற்றும் மன ஆற்றலா கிய அசுத்த மாய சக்தியே, நமது ஆன வத்தினால் தேவ மயக்கம் மற்றும் மன மயக்கம் ஆகின்றது. சிறிதும் ஒழுக்க மின்றி உடல் சுகத்தில் மயங்குகின்றோம். மனம் போன போக்கில் போகின்றோம் என்றால், நமக்கு இந்த கருப்புத்திரை அழுத்தமாக இருக்கிறது என்று பொருள். எனவே நாம் உணர்ந்து நல்ல ஒழுக்கத் திற்கு வர வேண்டும். உயர்வைத் தரக்கூ டியது ஒழுக்கம்.

எனவே அதை உயிரை விட மேலானது என்பார். எனவே நமது ஒழுக்கத்தை உயிர் ஊற்றாகக் காத்து பழகி வந்தால் இந்த திரை விளக்கங்களை நன்கு புரிந்து கொண்டால், தத்துவ விளக்கங்களை புரிந்து கொள்வது எளிதாகும்.

## ஓவியங்கள்:

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ-மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.

<u>குறிப்பு:</u>

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற தாங்களும், தங்களின் அனுபவத்தை நமது இல்லத்திற்கு வருகின்ற சேவதாரிகளிடம் தாங்கள் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அனுபவத்தை பகிர்ந்து கொண்டு பதிவு செய்வதன் மூலமாகக் தங்களின் அனுபவமானது அருள்ஜோதி புத்தகத்தில் வெளியிடப்படும்.**

சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாக தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**20. ஆனைக்கை போல்அபின அத்துவிதா நந்தமாம்**
**மோனத்தை வாக்குமனம் மட்டுமோ– ஞானத்தால்**
**காக்கை யிருந்தமனை கைமேற் பிறையென்ற**
**லாற்கருதின் நீ சிவமா வை.**

**மெய்ப்பொருளை அறிதற்கு உபாயமும் கூறி, உதாரணமும் காட்டுக?**

*யானையினது துதிக்கை, கை, நாசி என்று இரண்டு உறுப்புகளாய், இரண்டு விடயங்களையும் வேறு பிரித்து அறிவதா யிருந்தும் பிரிபடாது அதுவே இதுவாய், இதுவே அதுவாய் இருப்பது போல சிவம் என்றும், ஆன்மா என்றும் இரண்டு பொருளாய், இரண்டு ஞானங்களும் வேறாயிருந்தும் ஐக்கியத்துப் பிரிபடாது அதுவே இதுவாய், இதுவே அதுவாய் இருத்தலாகும்.*

*மனைகள் பலவற்றையும் கடந்து சென்று, காக்கை இருந்த மனையை நீ அடைதி என்று ஒருவன் அறிவிக்க அறிதல் போல், கருவிகள் பலவற்றை யுங் கடந்து சென்று நாதத் தத்துவத் தின் முடிவில் நின்ற சைதன்ய நீ என்று அறிவிக்க அறிதல் போலும், (சைதன் யம்=அறிவு,ஆன்மா, கடவுள்)*

*ஒருவனுக்கு ஒருவன் பிறையை அறி விக்குங்கால் விரல் மேற்பிறை என்று சுட் டிக்காட்டி அறிவிக்க, அவ்விரல் நேரே நோக்கி அப்பிறையைத் தரிசத்தல்போல், நாதாந்தத்தின் முடிவில் நின்று நீ திரு வருளை முன்னிட்டு சிவத்தை தரிசிக்க வேண்டும் என்பதாம்.*

*குறிப்பு: கண் போலும் ஆன்மா, விரல் போதும் திருவருள், பிறை*

**21. முலையுண்ணி நீருண்ணும் மோட்டெருமை மூடர்**
**சலமின்றிச் சந்துரைப்பார் தர்க்கர்– பாலதாரை**
**வட்டிலே போலும்அவர் மாயோக வாசகத்தைக்**
**கிட்டின் நகரங் கிடீர்.**

**தருக்கவாதிகளின் மொழிகள், செயல் கள் ஒவ்வொன்றாய் உதாரணங் காட்டி விளக்குக?**

*முலையுண்ணி பால் உண்ண அறியாது உதிரம் அருந்துதல் போல், நூலால் சிவா னந்தப் பேறு அடையாது இம்மை பயன் கோடலின் முலையுண்ணி என்றும்;*

*தடாகத்தில், தன்தாகந் தீர்க்கும் நீர் அருந்தாது அதனுள் வீழ்ந்து, சேறாக்கிச் செல்லும் எருமைபோல், ஞானிகள் பாற் செல்லினும் அவர் கூறும் ஞானமொழி களைக் கொள்ளாது, தருக்கமாடி அவர் சித்தத்தைக் கலக்கிச் சேறலின் எருமை என்றும்;*

*மூடர், யாவர் எது நான்கு கூறினும் தாம் பிடித்த படி விடாது நிற்றல் போல், தீதாயினும் தருக்கமாடித் தாம்பிடித்த பிடியை முற்றும் சாதித்தலின் மூடர்*



என்றும்;

சலனமின்றிச் சந்துரைப்பார்க்குக் கை வருத்தமேயன்றி பயினின்றவா? போல இவர் பலரோடுந் தருக்கமாட லான் வருதல் வாய் வகுத்தலை அன்றி பயன்வேறு இன்றாகலின் சலனமின்றிச் சந்துரைப்பார் என்றும்; (சலம்=நீர், சந் துரைப்பார்=சந்தனம் அரைத்தல்)

பற்றுளை வட்டிலில் (சல்லடை) நீர் தாரைகள் தோறும் சேறல் போல், ஓர் நெறி கூறுங்கால் அதனைமுற்றுப்பெற கூறாது, பல நெறிகள் மலைவுபெறக் கூறலின் பல தாரை வட்டில் என்றும்;

திருவருட் போதமின்றி மாயா போதத் தால் கூறலின் மாயயோக வாசகம் என்றும்;

கல்வி, பொருள் என்னும் இரண்டு செல் வங்களும் நல்லோர்பால்வரின் நன்மையும், தீயார் பால்வரின் தீமையும் மேன்மேல் வளர்தலின் இவர் தீயர் என்றும், இவரது மொழிகளை உண்மையாகக் கொள்வதற் கும் தீர்ந்து வரும் என்பதாம்.

குறிப்பு: தருக்கவாதிகள் மொழிகளை உண்மையாகக் கொள்வோர்க்கும் தீதுவ ரும் என்றும், நரகம் புகுவார் என்றும், இப்பாடலின் கருத்து நமக்கு உணர்த்து

# இந்த சிறு செயல் கடவுள் இன்பத்தை காட்டும்

ஒருவருடைய பசியின் அவத்தையை உணர்ந்து, பற்றுகள் அனைத்தையும் மறந்து, புசித்தவருக்கு ஆகாரம் கொடுக்க நினைத்தால், அந்தப் புண்ணியர்களை யோகிகள் என்றே உண்மையை அறிய வேண்டும். பசி என்று வருபவர்களைக் கண்டு, கருணை உள்ளம் கொண்டு, பசியாற உணவு கொடுத்து அவர் உண்பதை, தாம் உண்பதாக நினைத்தால் உண்டு மகிழ்பவரின் முகத்தில் கடவுள் இன்பத்தைக் கண்டு மகிழலாம். இந்த புண்ணியர்களே கடவுளைக் கண்டவர்கள் இவர்கள் கடவுள் இன்பத்தை அனுபவிக்கின்ற முத்தர்கள் என்றே உண்மையாக அறிய வேண்டும் என்று ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் குறிப்பிடுகின்றார் வள்ளல் பெருமான். பசியை மாற்றும் யோக செயலை விடச் சிறந்தது அப்பசியை ஆற்றும் காருண்ய செயல்.

# அருள்ஜோதி TV

அருள்ஜோதி
Aruljothi TV
APP

**TCCL கேபிள் TV Channel No : 125**

## நிகழ்ச்சிகளின்
## சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...












**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**

**ARULJOTHI MEDIA**
No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com

**BANK DETAILS**

ARULJOTHI SANMARKKA TRUST
INDIAN BANK
A/C.No.:6206014778
IFSC CODE: IDIB000P034
BRANCH : PERAMBUR

Aruljothi TV
+91 73052 63516
8883360800@okbizaxis

**Published by: S. Dhanalakshmi ,**
Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012